அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(இ) செவித்திறன் மாற்றுத் திறனாளிகள், சைகை மொழியில் பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பு ஒளிப்பதிவை வெளியிடுதல்-தொடக்க விழா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2016 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்ட விதிகளின்படி செவித்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் மின்னணு ஊடக நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்ளும் வகையில், சைகை மொழியில் பேரவை நடவடிக்கைகளின் தொகுப்பு, ஒளிப்பதிவு செய்யப்பட்டு YouTube மூலமாக ஊடகங்களில் ஒளிபரப்பு செய்வதற்கு ஏற்ற வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) வழங்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் தொடக்க நிகழ்வினை வருகிற 17–4–2023 ஆம் நாள் திங்கட்கிழமை காலை 9–45 மணிக்கு பேரவைத் தலைவர் அவர்களுடைய அறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைப்பார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்து, சிறப்பிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள்இ த்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 17–4–2023 (திங்கட்கிழமை) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை இரவு 8–56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

89. தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் நாற்பத்து ஏழாவது ஆண்டறிக்கை மற்றும் 2021–2022 ஆம் ஆண்டிற்கான கணக்குகள். [*2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(*b*) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)*] *(தமிழ்–ஆங்கிலம்)*

90. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் இருபத்து இரண்டாவது